ஊடக அறிக்கை
தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477423 +94 11 2346257
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

| வெளியிடுபவர் | பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் |
|---|---|
| திகதி | 2021.04.16 |

# வெளிநாட்டுத் துறைச் செயலாற்றம் - 2021 பெப்புருவரி

## பொதுநோக்கு

*ஏற்றுமதிகள் உலகளாவிய நோய்தொற்றிற்கு முன்னைய மட்டங்களுக்கு அதிகரித்தமை, தொழிலாளர் பணவனுப்பல்களில் காணப்பட்ட குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பு, மற்றும் உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் ஒப்பீட்டு ரீதியில் காணப்பட்ட உறுதியானதன்மை என்பன 2021 பெப்புருவரியில் இலங்கையின் வெளிநாட்டுத் துறைக்கு ஆதரவளித்தன. 2021 பெப்புருவரியில் வர்த்தகப் பற்றாக்குறை ஓராண்டிற்கு முன்னர் அறிவிக்கப்பட்ட அதேமட்டத்தில் பெருமளவிற்கு மாற்றமெதுவுமின்றிக் காணப்பட்டது. நிதியியல் கணக்கில், அரச பிணையங்கள் சந்தை மற்றும் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை இரண்டிலுமுள்ள வெளிநாட்டு முதலீடுகள் 2021 பெப்புருவரியில் தேறிய வெளிப்பாய்ச்சலைப் பதிவுசெய்தன. 2020 யூலையில் இந்திய றிசேர்வ் வங்கியிலிருந்து பெறப்பட்ட ஐ.அ.டொலர் 400 மில்லியன் கொண்ட சார்க் பினான்ஸ் நிதியின் பரஸ்பர பரிமாற்றல் வசதி முதிர்ச்சியடைந்தமையினைத் தொடர்ந்து 2021 பெப்புருவரியில் மீளச்செலுத்தப்பட்டது. உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தைக்கான தேறிய உட்பாய்ச்சல்கள் இம்மாத காலப்பகுதியில் செலாவணி வீதத்தின் மீதான அழுத்தத்தினைத் தளர்த்தியதுடன், ஒழுங்குமுறைப்படுத்தல் வழிமுறைகள் மத்திய வங்கி மொத்த அலுவல்சார் ஒதுக்குகளைக் கட்டியெழுப்புவதற்கு தேறிய அடிப்படையில் வெளிநாட்டுச் செலாவணியினை ஈர்த்துக்கொள்வதனை இயலுமைப்படுத்தின.*

### அட்டவணை 1: வெளிநாட்டுத் துறைச் செயலாற்றத்தின் சுருக்கம்(அ)

| வகை | பெப் 2020 ஐ.அ.டொ மில் | பெப் 2021 ஐ.அ.டொ மில் | மாற்றம் (%) | சன – பெப் 2020 ஐ.அ.டொ மில் | சன - பெப் 2021 ஐ.அ.டொ மில் | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| வணிகப்பொருள் ஏற்றுமதிகள் | 989 | 952 | -3.7 | 1,993 | 1,888 | -5.3 |
| வணிகப்பொருள் இறக்குமதிகள் | 1,562 | 1,524 | -2.5 | 3,298 | 3,115 | -5.5 |
| வர்த்தக மீதி (தேறிய) | -574 | -572 | | -1,304 | -1,227 | |
| சுற்றுலாவிலிருந்தானவருவாய்கள் | 279 (ஆ) | 5 (இ) | -98.4 | 586 (ஆ) | 7 (இ) | -98.8 |
| தொழிலாளர் பணவனுப்பல்கள் | 527 | 580 | 9.9 | 1,108 | 1,255 | 13.2 |
| கொழும்புப் பங்குப் பரிவர்த்தனைக்கானஉட்பாய்ச்சல் (தேறிய)(ஈ) | -6 | -26 | | -22 | -70 | |
| அரசாங்கத்திற்கான உட்பாய்ச்சல் (மொத்தம்) | 90 | 93 | | 232 | 148 | |
| தி.உண்டியல்கள் மற்றும் தி.முறிகள் | 20 | 0.01 | | 79 | 3 | |
| நீண்ட காலக் கடன்கள் | 70 | 93 | | 153 | 145 | |
| நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் | - | - | | - | - | |
| திரண்ட நிலுவை | | | | 310 | -774 | |

**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை, கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை, இலங்கை முதலீட்டுச் சபை, இலங்கை மத்திய வங்கி,

(அ) தற்காலிகமானது

(ஆ) 2020 இற்கான சராசரி தங்கும் காலம் மற்றும் நாளொன்றிற்கான சராசரி செலவின மதிப்பீடுகள் தொடர்பில் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் அளவீட்டுப் பெறுபேறுகளின் அடிப்படையில் திருத்தப்பட்டது

(இ) இந்த தற்காலிக மதிப்பீடுகள் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் 2021 அளவீட்டு மதிப்பீடுகளின் வெளியீட்டின் பின்னர் திருத்தப்படலாம்

(ஈ) முதலாந்தர மற்றும் இரண்டாந்தரச் சந்தைக் கொடுக்கல்வாங்கல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளது

இலங்கை மத்திய வங்கி, வணிகப்பொருள் வர்த்தகச் செயலாற்றம் தொடர்பான மேலதிகத் தகவல்களைக் கொண்ட "மாதாந்த வர்த்தக செய்தித்திரட்டு" ஒன்றினை வெளியிட்டு வருகிறது. இதனைப் புள்ளிவிபரங்கள் > பொருளாதாரக் குறிகாட்டிகள் > மாதாந்த வர்த்தகச் செய்தித்திரட்டின் கீழ், இலங்கை மத்திய வங்கியின் வெப்தளத்தில் பார்வையிட முடியும். https://www.cbsl.gov.lk/en/monthly-trade-bulletin

## வர்த்தக மீதி மற்றும் வர்த்தக மாற்று விகிதம்

**வர்த்தக மீதி:** 2021 பெப்புருவரியில் வர்த்தகக் கணக்கின் பற்றாக்குறை ஐ.அ.டொலர் 572 மில்லியனாக விளங்கி 2020 பெப்புருவரியில் பதிவுசெய்யப்பட்ட பற்றாக்குறையுடன் ஒப்பிடுகையில் பெருமளவிற்கு மாற்றமின்றிக் காணப்பட்டது. 2021 பெப்புருவரியில் ஏற்றுமதிகள் இறக்குமதிகள் இரண்டும் 2020 பெப்புருவரியுடன் ஒப்பிடுகையில் சிறிதளவு குறைவாகக் காணப்பட்டன. அதேவேளை, 2021 சனவரி – பெப்புருவரி காலப்பகுதியில் வர்த்தகக் கணக்கில் காணப்பட்ட ஒன்றுசேர்ந்த பற்றாக்குறை 2020இன் இதே காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 1,304 மில்லியனிலிருந்து ஐ.அ.டொலர் 1,227 மில்லியனுக்குக் குறுக்கடைந்தது. ஒன்றுசேர்ந்த பற்றாக்குறையில் காணப்பட்ட வீழ்ச்சிக்கு பங்களித்த முக்கிய காரணிகள் வரைபடம் 1இல் தரப்பட்டுள்ளன.

**வர்த்தக மாற்று விகிதம்:** வர்த்தக மாற்று விகிதம், அதாவது, இறக்குமதி விலைகளுக்கு ஏற்றுமதி விலைகளின் விகிதமாக விளங்குகின்ற வர்த்தக மாற்று விகிதம் 2021 பெப்புருவரியில் 3.5 சதவீதத்தினால் தேய்வடைந்தமைக்கு 2020 பெப்புருவரியுடன் ஒப்பிடுகையில் ஏற்றுமதி விலைகள் குறைவாக இருந்தமையும் இறக்குமதி விலைகள் உயர்வாக இருந்தமையுமே காரணங்களாகும்.

**வரைபடம்: 1 : 2021 சனவரி – பெப்புருவரி காலப்பகுதியில் வர்த்தகப் பற்றாக்குறையின் ஆண்டிற்கு ஆண்டு வீழ்ச்சிக்கான முக்கிய பங்களிப்புக் காரணிகள் (ஐ.அ.டொ. மில்லியன்)**




**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 2: மாதாந்த வர்த்தகப் பற்றாக்குறை (2020 – 2021)**




**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 3: வர்த்தக மாற்று விகிதம் (2020 - 2021)**




**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

## வணிகப்பொருள் ஏற்றுமதிகளின் செயலாற்றம்

**ஒட்டுமொத்த ஏற்றுமதிகள்: 2021 பெப்புருவரியில் வணிகப்பொருள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 2020 பெப்புருவரியுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 952 மில்லியனுக்கு 3.7 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன.** ஏற்றுமதி வருவாய்கள் உலகளாவிய நோய்தொற்றின் முன்னைய மட்டங்களை நோக்கிய மீட்சியொன்றினை எடுத்துக்காட்டி இலங்கையில் கொவிட்-19 பரவலின் இரண்டாம் அலையின் உச்சக்கட்டத்திற்குப் பின்னர் 2020 இனதும் (ஐ.அ.டொலர் 989 மில்லியன்) 2019இனதும் (ஐ.அ.டொலர் 981 மில்லியன்) இதே மாதங்களில் பதிவுசெய்யப்பட்ட ஏற்றுமதி வகைகளுக்கு மிக அணித்தான மட்டங்களை அடைந்தது.

**கைத்தொழில் ஏற்றுமதிகள்:** கைத்தொழில் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் ஓராண்டிற்கு முன்னைய மட்டங்களுடன் ஒப்பிடுகையில் 2021 பெப்புருவரியில் 6.3 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு பெற்றோலிய உற்பத்திகளின் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 60.8 சதவீதத்தினாலும் (ஆண்டிற்கு ஆண்டு) புடவைகள் மற்றும் ஆடைகள் 5.3 சதவீதத்தினாலும் (ஆண்டிற்கு ஆண்டு) வீழ்ச்சியடைந்தமையே முக்கிய காரணமாகும். பெற்றோலிய உற்பத்திகளின் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் வீழ்ச்சியடைந்தமைக்கு நாட்டிற்கான வானூர்திகள் மற்றும் கப்பல்களின் குறைந்த வருகை காரணமாக வானூர்தி எரிபொருள் மற்றும் நீர்க்கல எரிபொருள் என்பனவற்றின் வழங்கலின் அளவில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க குறைப்பும் அதேபோன்று இவ்வுற்பத்தி ஏற்றுமதிகளின் விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சி என்பனவும் காரணங்களாக அமைந்தன. ஐரோப்பிய ஒன்றியத்திற்கான ஆடை ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் அதிகரித்த வேளையில் ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஏனைய சேரிடங்களுக்கான ஏற்றுமதிகள் வீழ்ச்சியடைந்தன. அநேகமான சிறிய ஏற்றுமதிப் பிரிவுகளிலிருந்தான வருவாய்கள் வீழ்ச்சியடைந்த வேளையில் இறப்பர் உற்பத்திகள் (அறுவைச் சிகிச்சை மற்றும் ஏனையவற்றிற்கான கையுறைகள் மற்றும் இறப்பர் டயர்களின் ஏற்றுமதிகளில் ஏற்பட்ட அதிகரிப்பொன்றின் காரணமாக), பொறிகள் மற்றும் எந்திரவியல் சாதனங்கள், போக்குவரத்துக் கருவிகள், இரசாயன உற்பத்திகள் (முக்கியமாக செயற்படு கரியம்), பிளாத்திக்கு அதன் பொருட்கள் (முக்கியமாக பிளாத்திக்கு சாக்குகள் மற்றும் பைகள் வினில் பொலிமர்) மற்றும் மட்பாண்ட உற்பத்திகள் (முக்கியமாக மேசைப்பொருட்கள் மற்றும் சமையலறைப் பொருட்கள்) என்பனவற்றின் கீழ் அதிகரிப்புக்கள் பதிவுசெய்யப்பட்டன.

**வேளாண்மை ஏற்றுமதிகள்:** வேளாண்மைப் பொருட்களிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் ஓராண்டிற்கு முன்னைய ஏற்றுமதிகளுடன் ஒப்பிடுகையில் 2021 பெப்புருவரியில் 5.9 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு வாசனைத்திரவியங்கள், தெங்கு மற்றும் தேயிலையின் பங்களிப்புக்கள் முக்கிய காரணங்களாக அமைந்தன. வாசனைத்திரவியங்களிடையே மிளகு, கறுவா, சாத்திக்காய் மற்றும் சாதிப்பத்திரி என்பனவற்றிலிருந்தான வருவாய்களுக்கு விலை மற்றும் அளவு இரண்டினதும் அதிகரிப்பு உதவியளித்த வேளையில் கராம்பின் வருவாய்கள் அளவில் ஏற்பட்ட அதிகரிப்பின் காரணமாக அதிகரித்தன. தேயிலை ஏற்றுமதிகளிலிருந்தான அதிகரித்த வருவாய்களுக்கு விலை அதிகரிப்புக்கள் முக்கிய காரணமாக அமைந்த வேளையில் அளவுகள் வீழ்ச்சியைப் பதிவுசெய்தன. தென்னந்தும்பின் ஏற்றுமதிகளினூடாக தெங்கு ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் முக்கியமாக அதிகரித்தன. உண்ணத்தக்க விதைகள் மற்றும் கடலுணவு போன்ற சிறுவேளாண்மை உற்பத்திகளிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்தன.

**கனிப்பொருள் ஏற்றுமதிகள்:** 2021 பெப்புருவரியில் கனிப்பொருள் ஏற்றுமதிகள் 2020 பெப்புருவரியினை விட உயர்வாக இருந்தமைக்கு ரைற்றானியம் மற்றும் சிற்கோனியம் தாது, சாம்பல் கட்டிகள், காரீயம், காரீயத்தூள் போன்ற விடயங்களின் ஏற்றுமதிகளில் ஏற்பட்ட அதிகரிப்பே முக்கிய காரணமாகும்.

**ஏற்றுமதிச் சுட்டெண்கள்:** 2021 பெப்புருவரியில் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் ஏற்றுமதி அளவுச் சுட்டெண்ணும் அலகுப்பெறுமதிச் சுட்டெண்ணும் முறையே 1.6 சதவீதத்தினாலும் 2.2 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்தன. இது, குறைந்த ஏற்றுமதி அளவுகள் மற்றும் குறைந்த விலைகள் இரண்டினதும் இணைந்த தாக்கம் காரணமாக ஏற்றுமதி வருவாய்களில் ஏற்பட்ட வீழ்ச்சியை எடுத்துக்காட்டுகிறது.

**வரைபடம் 4: மாதாந்த ஏற்றுமதிச் செயலாற்றம்**




**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 5: மாதாந்த ஏற்றுமதி அளவுச் சுட்டெண்**




**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

## அட்டவணை 2: வணிகப்பொருட்கள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் (அ)

| வகை | பெப் 2020 ஐ.அ.டொ மில் | பெப் 2021 ஐ.அ.டொ மில் | மாற்றம் (%) | சன-பெப் 2020 ஐ.அ.டொ மில் | சன-பெப் 2021 ஐ.அ.டொ மில் | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **1. கைத்தொழில் ஏற்றுமதிகள்** | **790.1** | **740.3** | **-6.3** | **1,602.7** | **1,472.6** | **-8.1** |
| உணவு, குடிபானம் மற்றும் புகையிலை | 36.6 | 41.7 | 13.7 | 72.1 | 81.4 | 12.8 |
| விலங்குத்தீன் | 11.0 | 8.6 | -21.9 | 19.6 | 20.5 | 4.5 |
| புடவைகள் மற்றும் ஆடைகள் | 468.1 | 443.3 | -5.3 | 942.2 | 866.3 | -8.1 |
| இதில் ஆடைகள் | 433.7 | 408.4 | -5.8 | 869.8 | 793.9 | -8.7 |
| புடவைகள் | 25.1 | 22.8 | -9.3 | 52.4 | 47.4 | -9.4 |
| ஏனைய தயாரிக்கப்பட்ட புடவைப் பொருட்கள் | 9.3 | 12.1 | 30.7 | 20.1 | 25.0 | 24.8 |
| இறப்பர் உற்பத்திகள் | 71.5 | 81.0 | 13.2 | 141.7 | 161.2 | 13.7 |
| இரத்தினக்கற்கள், வைரங்கள் மற்றும் ஆபரணங்கள் | 21.4 | 19.7 | -8.2 | 46.1 | 43.1 | -6.7 |
| பொறி மற்றும் எந்திரவியல் சாதனங்கள் | 34.8 | 39.6 | 13.9 | 65.3 | 80.7 | 23.7 |
| போக்குவரத்துச் சாதனங்கள் | 6.9 | 9.0 | 30.0 | 14.1 | 15.8 | 11.9 |
| பெற்றோலிய உற்பத்திகள் | 57.8 | 22.7 | -60.8 | 140.6 | 57.1 | -59.4 |
| இரசாயன உற்பத்திகள் | 12.9 | 15.3 | 18.3 | 28.1 | 32.4 | 15.4 |
| மரம் மற்றும் தாள் உற்பத்திகள் | 11.2 | 9.9 | -11.9 | 21.2 | 18.9 | -11.0 |
| அச்சிடல் கைத்தொழில் உற்பத்திகள் | 3.0 | 2.8 | -5.9 | 7.7 | 3.7 | -52.7 |
| தோல், பயணப்பொருட்கள் மற்றும் காலணி | 7.3 | 4.5 | -39.2 | 12.9 | 7.9 | -38.4 |
| பிளாத்திக்கு மற்றும் அதன் பொருட்கள் | 6.0 | 6.6 | 9.3 | 11.5 | 11.8 | 2.5 |
| அடிப்படை உலோகங்கள் மற்றும் பொருட்கள் | 12.1 | 9.0 | -25.6 | 24.8 | 19.1 | -23.0 |
| மட்பாண்டஉற்பத்திகள் | 2.6 | 2.9 | 9.5 | 4.8 | 5.6 | 18.3 |
| ஏனைய கைத்தொழில் ஏற்றுமதிகள் | 26.6 | 23.9 | -10.3 | 49.7 | 47.0 | -5.5 |
| **2. வேளாண்மை ஏற்றுமதிகள்** | **195.1** | **206.5** | **5.9** | **383.8** | **406.5** | **5.9** |
| தேயிலை | 107.8 | 112.5 | 4.4 | 207.5 | 213.5 | 2.9 |
| இறப்பர் | 3.1 | 2.7 | -12.9 | 5.8 | 6.7 | 14.1 |
| தெங்கு | 26.2 | 30.9 | 18.1 | 50.7 | 55.1 | 8.6 |
| வாசனைத்திரவியங்கள் | 18.7 | 33.1 | 77.6 | 38.1 | 75.2 | 97.1 |
| காய்கறிகள் | 2.4 | 1.5 | -35.4 | 5.0 | 3.2 | -36.4 |
| தயாரிக்கப்படாத புகையிலை | 1.7 | 2.4 | 39.8 | 3.4 | 4.6 | 37.4 |
| சிறுவேளாண்மை உற்பத்திகள் | 14.7 | 9.2 | -37.1 | 29.0 | 17.3 | -40.4 |
| கடலுணவு | 20.6 | 14.1 | -31.6 | 44.2 | 31.0 | -30.0 |
| **3. கனிம ஏற்றுமதிகள்** | **1.8** | **3.6** | **98.5** | **3.9** | **7.1** | **84.0** |
| **4. வகைப்படுத்தப்படாத ஏற்றுமதிகள்** | **1.5** | **1.3** | **-15.0** | **3.0** | **2.2** | **-26.7** |
| **மொத்த ஏற்றுமதிகள்** | **988.5** | **951.7** | **-3.7** | **1,993.4** | **1,888.4** | **-5.3** |

(அ) தற்காலிகமானவை

**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் அதிகாரசபை,இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் ஏனைய பெற்றோலிய ஏற்றுமதியாளர்கள், இலங்கை மத்திய வங்கி

## வணிகப்பொருள் இறக்குமதிகளின் செயலாற்றம்

**ஒட்டுமொத்த இறக்குமதிகள்: 2021 பெப்புருவரியில் வணிகப்பொருள் இறக்குமதிகளின் மீதான செலவினம் ஐ.அ.டொலர் 1,524 மில்லியனாக விளங்கி 2020 பெப்புருவரியுடன் ஒப்பிடுகையில் 2.5 சதவீதம் குறைவாகக் காணப்பட்டது.** இடைநிலைப்பொருட்கள் மற்றும் முதலீட்டுப்பொருட்களின் கீழ் வகைப்படுத்தப்பட்ட பொறிகள் மற்றும் கருவிகள் மீதான செலவினத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு இறக்குமதிச் செலவினத்தின் ஏற்பட்ட உயர்விற்குப் பங்களித்தது. எனினும், குறிப்பிட்ட அத்தியாவசியமல்லாத பொருட்களின் இறக்குமதி மீதான கட்டுப்பாடுகள் உணவல்லா நுகர்வுப்பொருட்கள் மற்றும் முதலீட்டுப்பொருட்களின் கீழ் வகைப்படுத்தப்பட்ட போக்குவரத்துக் கருவிகள் மற்றும் கட்டடவாக்கப்பொருட்கள் மீதான இறக்குமதிச் செலவினத்தினைத் தொடர்ந்தும் குறைத்துவைத்திருந்தது.

**நுகர்வுப்பொருட்கள்:** 2020 பெப்புருவரியுடன் ஒப்பிடுகையில் 2021 பெப்புருவரியில் நுகர்வுப்பொருட்களின் இறக்குமதி மீதான செலவினம் 16.7 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு உணவு மற்றும் குடிபானங்களில் ஏற்பட்ட 3.0 சதவீதம் கொண்ட குறைப்பும் உணவல்லா நுகர்வுப்பொருட்களில் ஏற்பட்ட 26.4 சதவீதம் கொண்ட குறைப்பும் காரணங்களாக அமைந்தன. உணவு மற்றும் குடிபானங்கள் இறக்குமதிச் செலவினத்தில் ஏற்பட்ட ஆண்டிற்கு ஆண்டு வீழ்ச்சிக்கு வாசனைத்திரவியங்கள் (முக்கியமாக மிளகாய்), குடிபானங்கள் (முக்கியமாக வெறியக் குடிவகைகள்), காய்கறிகள் (உருளைக்கிழங்கு, பயறு, பெரிய வெங்காயம், பருப்பு வகை போன்றவை) மற்றும் ஏனைய வகைகள் மீதான செலவினத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியே தூண்டுதலாக அமைந்தது. எனினும், 2021 பெப்புருவரியில் எண்ணெய் மற்றும் கொழுப்பு மீதான செலவினம் 2020 பெப்புருவரியுடன் ஒப்பிடுகையில் உயர்வாகக் காணப்பட்டமைக்கு, ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் பன்னாட்டுச் சந்தைகளில் விலைகள் அதிகரித்தமையின் காரணமாக 2020இல் சிறப்பு பண்டத் தீர்வையில் ஏற்பட்ட குறைப்பினால் ஏற்பட்ட சாத்தியமான தாக்கம் காரணமாக தேங்காய் எண்ணெய் இறக்குமதிகள் மீதான செலவில் ஏற்பட்ட அதிகரிப்பே முக்கிய காரணமாகும். பால்மா மற்றும் சீனி இறக்குமதிகள் மீதான செலவினமும் ஓரளவிற்கு அதிகரித்தது. உணவல்லா இறக்குமதிப்பொருட்களின் இறக்குமதியில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு தனியாட்களின் பயன்பாட்டிற்கான ஊர்திகளின் இறக்குமதியில் ஏற்பட்ட வீழ்ச்சி தூண்டுதலாக விளங்கிய வேளையில், செல்லிடத் தொலைபேசி போன்ற உணவல்லா நுகர்வுப்பொருட்கள் சில குறிப்பிடத்தக்க அதிகரிப்புக்களைப் பதிவுசெய்தன. 2021 பெப்புருவரியில் மருந்து மற்றும் மருந்தாக்கல் பொருட்கள் மீதான இறக்குமதிச் செலவினம் கொவிட்-19 தடுப்பு மருந்து மீது உறப்பட்ட ஐ.அ.டொலர் 2.63 மில்லியனை உள்ளடக்கியிருந்தது.

**இடைநிலைப்பொருட்கள்:** 2021 பெப்புருவரியில் இடைநிலைப்பொருட்கள் மீதான செலவினம் ஓராண்டிற்கு முன்னைய நிலையுடன் ஒப்பிடுகையில் 3.8 சதவீதத்தினால் அதிகரித்தது. இவ்வகையின் கீழ் மிகப்பெரும் இறக்குமதியாக விளங்கும் எரிபொருள் மீதான செலவினம் வீழ்ச்சியைப் பதிவுசெய்த வேளையில் ஏனைய பல இடைநிலைப்பொருட்கள் குறிப்பாக, புடவைகள் மற்றும் ஆடைப்பொருட்கள்; கோதுமை (முக்கியமாக இறக்குமதி செய்யப்பட்ட அளவு); இரசாயன உற்பத்திகள்; பிளாத்திக்கு மற்றும் அதன் பொருட்கள்; இறப்பர் மற்றும் அதன் பொருட்கள் என்பன மீதான இறக்குமதிச் செலவினம் அதிகரித்தது. எரிபொருள் மீதான செலவினம் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 23.5 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு 2020 பெப்புருவரியுடன் ஒப்பிடுகையில் மசகெண்ணெய் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியம் அதேபோன்று நிலக்கரி என்பனவற்றின் இறக்குமதி செய்யப்பட்ட அளவு குறைவாக இருந்தமையின் முக்கிய காரணமாக அவற்றின் மீதான இறக்குமதிச் செலவினம் வீழ்ச்சியடைந்தது. இவ்வீழ்ச்சி 2020 பெப்புருவரியில் இறக்குமதி செய்யப்பட்ட அளவு உயர்வாக இருந்தமையினால் தளத்தாக்கத்தினைப் பிரதிபலித்தது. மசகெண்ணெய்யின் சராசரி இறக்குமதி விலை 2020 பெப்புருவரியின் பீப்பாய் ஒன்றிற்கு ஐ.அ.டொலர் 63.68 இலிருந்து 2021 பெப்புருவரியில் பீப்பாய் ஒன்றிற்கு ஐ.அ.டொலர் 64.07 இற்கு மெதுவாக அதிகரித்தது. எனினும் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திகளின் சராசரி இறக்குமதி விலை சிறிதளவால் வீழ்ச்சியடைந்தது.

**முதலீட்டுப்பொருட்கள்:** முதலீட்டுப்பொருட்கள் மீதான இறக்குமதிச் செலவினம் 2020 பெப்புருவரியுடன் ஒப்பிடுகையில் 2021 பெப்புருவரியில் 4.7 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. கட்டடவாக்கப்பொருட்கள் மற்றும் போக்குவரத்துச் சாதனங்கள் மீதான செலவினம் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் வீழ்ச்சியைப் பதிவுசெய்த வேளையில் பொறிகள் மற்றும் கருவிகளின் இறக்குமதி மீதான செலவினம் அதிகரித்தமைக்கு முக்கியமாக கணனிகள், கடத்திச் சாதனங்கள் குறிப்பிட்ட பொறியியற் கருவிகள் மற்றும் கைத்தொழில், வேளாண்மை பொறிகள் மற்றும் ஏனைய பொருட்கள் தொடர்பிலானவற்றில் பதிவுசெய்யப்பட்ட அதிகரிப்புக்களே முக்கிய காரணமாகும்.

**இறக்குமதிச் சுட்டெண்கள்:** 2021 பெப்புருவரியில் இறக்குமதி அளவுச் சுட்டெண் 3.9 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்த வேளையில் அலகுப் பெறுமதிச் சுட்டெண் 1.4 சதவீதத்தினால் அதிகரித்தது. இது, இறக்குமதிச் செலவினத்தில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு குறைந்த இறக்குமதி அளவுகளே காரணமாக அமைந்தது என்பதனை எடுத்துக்காட்டியது.

**வரைபடம் 6: மாதாந்த இறக்குமதிச் செயலாற்றம்**




**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 7: மாதாந்த இறக்குமதி அளவுச் சுட்டெண்**




**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

## அட்டவணை 3: வணிகப்பொருட்களின் இறக்குமதிகள் மீதான செலவினம்(அ)

| வகை | பெப் 2020 ஐ.அ.டொ மில் | பெப் 2021 ஐ.அ.டொ மில் | மாற்றம் (%) | சன-பெப் 2020 ஐ.அ.டொ மில் | சன-பெப் 2021 ஐ.அ.டொ மில் | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **1. நுகர்வுப் பொருட்கள்** | **327.3** | **272.7** | **-16.7** | **699.0** | **618.3** | **-11.5** |
| உணவு மற்றும் குடிபானங்கள் | 135.8 | 131.8 | -3.0 | 283.4 | 315.6 | 11.4 |
| தானியங்கள் மற்றும் ஆலையிடும் கைத்தொழில் உற்பத்திகள் | 4.5 | 2.9 | -35.1 | 9.9 | 6.7 | -32.4 |
| பாற்பண்ணை உற்பத்திகள் | 28.0 | 31.7 | 12.9 | 64.3 | 54.8 | -14.8 |
| காய்கறிகள் | 30.0 | 27.2 | -9.4 | 65.9 | 67.6 | 2.6 |
| கடலுணவு | 11.7 | 5.4 | -53.8 | 28.9 | 17.5 | -39.3 |
| சீனி மற்றும் இனிப்பு வகைகள் | 25.8 | 29.1 | 12.8 | 45.8 | 86.6 | 88.9 |
| வாசனைத்திரவியங்கள் | 13.4 | 6.2 | -53.7 | 23.7 | 18.7 | -20.9 |
| ஏனைய உணவு மற்றும் குடிபானங்கள் | 22.3 | 29.3 | 31.2 | 44.7 | 63.6 | 42.1 |
| உணவல்லா நுகர்வுப்பொருட்கள் | 191.4 | 140.9 | -26.4 | 415.7 | 302.7 | -27.2 |
| தனியாள் ஊர்திகள் | 53.6 | 0.9 | -98.3 | 116.9 | 1.4 | -98.8 |
| மருந்து மற்றும் மருந்தாக்கற்பொருட்கள் | 42.2 | 41.2 | -2.4 | 91.0 | 86.0 | -5.5 |
| வீட்டு உபயோகப்பொருட்கள் | 19.7 | 17.5 | -11.0 | 39.7 | 39.4 | -0.6 |
| ஆடைகள் மற்றும் அதன் துணைப்பொருட்கள் | 27.8 | 17.4 | -37.2 | 58.0 | 35.9 | -38.0 |
| தொலைத்தொடர்பூட்டல் கருவிகள் | 18.0 | 30.8 | 71.6 | 41.3 | 69.2 | 67.6 |
| வீட்டுச்சாதனங்கள் மற்றும் தளபாடப்பொருட்கள் | 13.2 | 13.8 | 5.0 | 31.0 | 29.5 | -4.9 |
| ஏனைய உணவல்லா நுகரக்கூடியவைகள் | 17.1 | 19.3 | 12.8 | 37.8 | 41.2 | 9.0 |
| **2. இடைநிலைப் பொருட்கள்** | **911.5** | **945.9** | **3.8** | **1,846.0** | **1,860.8** | **0.8** |
| எரிபொருள் | 418.7 | 320.2 | -23.5 | 710.6 | 630.0 | -11.3 |
| இதில் மசகெண்ணெய் | 93.4 | 44.9 | -52.0 | 140.3 | 127.1 | -9.5 |
| சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியம் | 289.4 | 246.5 | -14.8 | 496.6 | 443.0 | -10.8 |
| நிலக்கரி | 35.9 | 28.8 | -19.7 | 73.6 | 59.9 | -18.6 |
| வைரங்கள், அருங்கற்கள் மற்றும் உலோகங்கள் | 6.3 | 12.1 | 91.6 | 20.2 | 23.1 | 14.4 |
| புடவைகள் மற்றும் புடவைப்பொருட்கள் | 182.0 | 222.8 | 22.4 | 482.8 | 459.2 | -4.9 |
| தாள், தாள் அட்டைகள் மற்றும் அதன் பொருட்கள் | 32.3 | 31.9 | -1.4 | 70.5 | 63.1 | -10.4 |
| வேளாண்மை உள்ளீடுகள் | 15.7 | 19.3 | 23.6 | 36.3 | 42.5 | 17.0 |
| கோதுமை மற்றும் சோளம் | 8.4 | 55.5 | 558.6 | 17.3 | 62.4 | 260.1 |
| அடிப்படை உலோகங்கள் | 20.4 | 28.2 | 37.9 | 45.6 | 66.9 | 46.6 |
| பிளாத்திக்கு மற்றும் அதன் பொருட்கள் | 45.2 | 57.8 | 27.9 | 94.9 | 117.1 | 23.5 |
| இரசாயன உற்பத்திகள் | 64.4 | 77.4 | 20.2 | 138.5 | 165.5 | 19.5 |
| வளமாக்கி | 13.2 | 14.0 | 5.7 | 19.2 | 18.7 | -2.6 |
| இறப்பர் மற்றும் அதன் பொருட்கள் | 24.3 | 34.4 | 41.5 | 46.9 | 60.5 | 28.9 |
| கனிம உற்பத்திகள் | 13.3 | 7.5 | -43.3 | 26.0 | 19.8 | -24.0 |
| ஏனைய இடைநிலைப்பொருட்கள் | 67.2 | 64.8 | -3.6 | 137.1 | 131.9 | -3.8 |
| **3. முதலீட்டுப்பொருட்கள்** | **318.8** | **303.7** | **-4.7** | **747.0** | **633.8** | **-15.2** |
| பொறி மற்றும் சாதனம் | 183.5 | 193.8 | 5.6 | 442.1 | 410.5 | -7.2 |
| கட்டடப்பொருட்கள் | 102.5 | 89.2 | -13.0 | 221.8 | 176.9 | -20.2 |
| போக்குவரத்துச் சாதனம் | 32.6 | 20.6 | -36.8 | 82.5 | 46.1 | -44.1 |
| ஏனைய முதலீட்டுப்பொருட்கள் | 0.3 | 0.1 | -58.5 | 0.7 | 0.3 | -55.4 |
| **4. வகைப்படுத்தப்படாத இறக்குமதிகள்** | **4.8** | **1.3** | **-72.5** | **5.7** | **2.3** | **-59.5** |
| **மொத்த இறக்குமதிகள்** | **1,562.3** | **1,523.6** | **-2.5** | **3,297.7** | **3,115.2** | **-5.5** |
| **இதில் எரிபொருள் அல்லா இறக்குமதிகள்** | **1,143.6** | **1,203.4** | **5.2** | **2,587.1** | **2,485.2** | **-3.9** |

(அ) தற்காலிகமானவை (ஆ) பருப்பு, வெங்காயம், உருளைக்கிழங்கு, அவரை வகை மற்றும் ஏனைய காய்கறிகள் உட்பட

**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், லங்கா ஐஓசி பிஎல்சி, இலங்கை மத்திய வங்கி

## நடைமுறைக் கணக்கிற்கான ஏனைய முக்கிய உட்பாய்ச்சல்கள்

**வெளிநாட்டவர்களுக்காக நாட்டின் எல்லைகள் மீண்டும் திறக்கப்பட்டமையினைத் தொடர்ந்து சுற்றுலாத் துறை மெதுவாக மீட்சியடையத் தொடங்கியிருக்கிறது.** இதற்கமைய, 2021 பெப்புருவரியில் சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் 2021 சனவரியில் பதிவுசெய்யப்பட்ட 1,682 வருகைகளுடன் ஒப்பிடுகையில் 3,366 ஆகப் பதிவுசெய்யப்பட்டது. எனினும், 2021 பெப்புருவரியின் வருகைகள் இலங்கையில் கொவிட்-19 பரவுவதற்கு உடனடியாக முற்போந்த காலப்பகுதியான 2020 பெப்புருவரியில் பதிவுசெய்யப்பட்ட 207,507 வருகைகளை விட 98.4 சதவீதம் குறைவானதாகும். இதன் விளைவாக, 2021 சனவரி - பெப்புருவரி காலப்பகுதியில் மொத்த சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் 2020இன் இதே காலப்பகுதியின் 435,941 வருகைகளுடன் ஒப்பிடுகையில் 5,048 வருகைகளைப் பதிவுசெய்தது. 2021 பெப்புருவரி காலப்பகுதியில் சுற்றுலாப் பயணிகளின் முக்கிய மூல நாடுகளான கஸகஸ்தான், உக்கிரேன் மற்றும் ஜேர்மனி என்பன விளங்கின. சுற்றுலாப் பயணிகளின் வருகைகையினை அடிப்படையாகக் கொண்டு மதிப்பிடப்படுகின்ற சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் 2020இன் தொடர்பான மாத காலப்பகுதியின் ஐ.அ.டொலர் 279 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2021 பெப்புருவரியில் ஐ.அ.டொலர் 5 மில்லியனாக விளங்கியது. இதற்கமைய, சுற்றுலாவிலிருந்தான ஒன்றுசேர்ந்த வருவாய்கள் 2021 சனவரி – பெப்புருவரி காலப்பகுதியில் ஏறத்தாழ ஐ.அ.டொலர் 7 மில்லியன் என மதிப்பிடப்பட்டது.

**2021 பெப்புருவரியில் தொழிலாளர் பணவனுப்பல்கள் உறுதியாக அதிகரித்தன.** 2021 பெப்புருவரியில் தொழிலாளர் பணவனுப்பலகள் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் ஐ.அ.டொலர் 580 மில்லியனுக்கு 9.9 சதவீதத்தினால் அதிகரித்தன. இவ்வதிகரிப்பு, 2021 சனவரியிலிருந்து பெப்புருவரி வரையிலான காலப்பகுதியில் 2020இன் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 1,255 மில்லியனுக்கு 13.2 சதவீத வளர்ச்சியைப் பதிவுசெய்வதற்கு வழிவகுத்தது.

**வரைபடம் 8: மாதாந்த சுற்றுலாப் பயணிகளின் வருகைகள்**




**மூலம்:** இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை

**வரைபடம் 9: சுற்றுலா மற்றும் தொழிலாளர் பணவனுப்பல்கள்**




**மூலங்கள்:** இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை
உரிமம்பெற்ற வங்கிகள்
இலங்கை மத்திய வங்கி

## நிதியியல் பாய்ச்சல்கள்

**இம்மாத காலப்பகுதியில் அரச பிணையங்கள் சந்தையின் வெளிநாட்டு முதலீடுகள் சிறிதளவு தேறிய வெளிப்பாய்ச்சலைப் பதிவுசெய்தது.** 2021 பெப்புருவரியில் ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட அரச பிணையங்கள் சந்தையில் வெளிநாட்டு முதலீடுகளின் தேறிய வெளிப்பாய்ச்சல் ஐ.அ.டொலர் 2 மில்லியனாக விளங்கி 2021 சனவரியிலிருந்து பெப்புருவரி வரையான காலப்பகுதியில் ஏறத்தாழ ஐ.அ.டொலர் 1 மில்லியன் கொண்ட ஒன்றுசேர்ந்த தேறிய உட்பாய்ச்சலை விளைவித்தது. ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட அரச பிணையங்கள் சந்தையில் வெளிநாட்டு முதலீட்டின் மொத்த வெளிநின்ற வெளிப்படுத்துகை 2021 பெப்புருவரி இறுதியளவில் ஐ.அ.டொலர் 36 மில்லியனில் தொடர்ந்தும் குறைவாகக் காணப்பட்டது.

2021 பெப்புருவரியில் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையின் இரண்டாந்தரச் சந்தையிலிருந்து ஐ.அ.டொலர் 26 மில்லியன் கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சல்கள் காணப்பட்டன. ஒன்றுசேர்ந்த அடிப்படையில் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை 2021 பெப்புருவரியில் முடிவடைந்த இரண்டு மாத காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 70 மில்லியன் கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சலைப் பதிவுசெய்தது.

அதேவேளை, அரசிற்கான நீண்ட காலக் கடன்கள் 2021 பெப்புருவரியில் ஐ.அ.டொலர் 22 மில்லியன் கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சலைப் பதிவுசெய்தது.

## பன்னாட்டு ஒதுக்குகள்

**2021 பெப்புருவரி இறுதியிலுள்ளவாறு மொத்த அலுவல்சார் ஒதுக்குகளின் மட்டம் ஐ.அ.டொலர் 4.6 பில்லியனாக விளங்கியது.** இலங்கை மத்திய வங்கி 2021 பெப்புருவரியில் ஐ.அ.டொலர் 400 மில்லியன் கொண்ட சார்க்க நிதிய பரஸ்பர பரிமாற்றல் வசதி முதிர்ச்சியடைந்ததனைத் தொடர்ந்து அதனைத் தீர்ப்பனவு செய்தது. 2021 பெப்புருவரி இறுதியிலுள்ளவாறு மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் 3.5 மாத இறக்குமதிகளுக்குச் சமமானதாகக் காணப்பட்டது. அதேவேளை, மொத்த அலுவல்சார் ஒதுக்குகளையும் வங்கித்தொழில் துறையின் வெளிநாட்டுச் சொத்துக்களையும் உள்ளடக்கிய மொத்த வெளிநாட்டு சொத்துக்கள் 2021 பெப்புருவரியில் ஐ.அ.டொலர் 7.3 பில்லியனாக விளங்கி 5.5 மாத இறக்குமதிகளுக்குப் போதுமானதாக இருந்தன.

**வரைபடம் 10: மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் மற்றும் ஒதுக்குப் போதுமை**




**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

## வெளிநாட்டுச் செலாவணி வீத அசைவுகள்

**உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தைக்கான வாடிக்கையாளர் உட்பாய்ச்சல்கள் அதிகரித்தமையின் காரணமாக 2021 பெப்புருவரி காலப்பகுதியில் செலாவணி வீதம் ஒப்பீட்டு ரீதியில் உறுதியானதாகக் காணப்பட்டது.** இதற்கமைய, பெப்புருவரி மாத காலப்பகுதியில் இலங்கை ரூபா ஐ.அ.டொலருக்கெதிராக 0.2 சதவீதத்தினால் சிறிதளவால் உயர்வடைந்தது. இம்மாத காலப்பகுதியில் அனைத்து உரிமம்பெற்ற வங்கிகளும் தொழிலாளர் பணவனுப்பல்களில் 10 சதவீதத்தினை மத்திய வங்கிக்கு விற்பனை செய்ய வேண்டுமென்றும் 2021 பெப்புருவரி 18 இலிருந்து ஏற்றுமதிப் பெறுகைகளில் 50 சதவீதத்தினை இலங்கை மத்திய வங்கிக்கு மாற்றல் செய்ய வேண்டுமெனவும் பணிக்கின்ற ஒழுங்குமுறைப்படுத்தல் வழிமுறைகள் நடைமுறைக்கிட்டதன் மூலம் இம்மாத காலப்பகுதியில் மத்திய வங்கி தேறிய அடிப்படையில் ஐ.அ.டொலர் 23 மில்லியனை ஈர்த்துக் கொள்ளக்கூடியதாக இருந்தது. ஒட்டுமொத்தமாக, 2021 ஏப்பிறல் 16 வரையான காலப்பகுதியில் ரூபா ஐ.அ.டொலருக்கெதராக 6.8 சதவீதம் கொண்ட தேய்வினைப் பதிவுசெய்தது. அதேவேளை, குறுக்கு நாணய அசைவுகளைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் இலங்கை ரூபா யூரோ, ஸ்ரேலிங் பவுண், அவுஸ்திரேலிய டொலர், யப்பானிய யென் மற்றும் இந்தியன் ரூபா என்பனவற்றிற்கெதிராக தேய்வடைந்தது.

**வரைபடம் 11: ஐக்கிய அமெரிக்க டொலரிற்கெதிராக இலங்கை ரூபாவின் அசைவு**




**மூலம்:** இலங்கை மத்திய வங்கி




**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

**அட்டவணை 4: தெரிவுசெய்யப்பட்ட நாணயங்களுக்கெதிராக இலங்கை ரூபாவின் அசைவு**

| நாணயம் | 2019 | 2020 | (2021 ஏப்பிறல் 16 வரை) தேய்வு (-)/ உயர்வு (+) |
|---|---|---|---|
| ஐ.அ.டொலர் | +0.6% | -2.6% | -6.8% |
| யூரோ | +2.6% | -11.2% | -4.0% |
| ஸ்ரேர்லிங் பவுண் | -2.8% | -6.2% | -7.5% |
| யப்பானிய யென் | -1.0% | -7.5% | -1.5% |
| அவுஸ்திரேலிய டொலர் | +1.3% | -11.4% | -7.0% |
| இந்தியன் ரூபா | +2.6% | 0.0% | -4.9% |

**மூலம்:** இலங்கை மத்திய வங்கி